முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.99/2016 PW: 2 04.09.2023**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **04** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய கொளஞ்சி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கொளஞ்சி | வயது | 63 |
| த/க. பெயர் | தங்கராசு | தொழில் | விவசாயம் |
| ஜாதி | | கிராமம் | கோழியூர் |
| வட்டம் | | மாவட்டம் | |

**குறுக்கு விசாரணை**

வாதி தர்மராசு அவர் தாத்தாவும் எனது தகப்பனாரும் சகோரர்கள் என்றால் சரிதான். அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 6 பேர். அவர்களுக்குள் பாகம் பிரிந்ததா என்றால் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது. பெரியசாமிக்கு எந்த வீடு ஒதுக்கப்பட்டது என்றால் திருவள்ளுவர் நகர் ஓட்டுவீடு ஒதுக்கப்பட்டது. பெரியசாமிக்கு பள்ளிக்ககூட தெருவில் வீடு உள்ளதா என்றால் இல்லை. அது யாருடையது என்றால் செல்வராசு கிரையம் வாங்கிய சொத்து. யாரிடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. பள்ளிக்கூடத் தெருவில் உள்ளது தான் பெரியசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும், திருவள்ளுவர்நகரில் உள்ள வீடு வாய்மொழியாக பொதுவாக செல்வராசு பெயரில் வாங்கப்பட்டது. தொட்டியிடம் இருந்து செல்வராசு கிரயம் வாங்கினார். தாவா சொத்து திருவள்ளுவர் நகரில் உள்ளதுஎன்றாலும், திராவிட மணி அவர் தகப்பனார் பெயர் தொட்டி ஆகியோர் அண்ணக்கொடி பெயரிலும் கிரையம் வாங்கியது என்றால் இல்லை. அவர் பெயர் மாற்றி இருப்பார்கள். அது வாய்மொழியாக வாங்கவில்லை என்றாலும் பொதுவாக வாங்கவில்லை என்றாலும், பதிவு செய்யப்பட்டது என்றாலும் இல்லை. நடுவில் மாற்றி அம்மா பெயரில் எழுதியிருப்பார்கள்.அண்ணக்கொடி பெயரில் கிரையம் இருப்பதால் அவர் யாருக்கும் எழுதிவைக்காததால் வாரிசுகளுக்கு பாகம் உள்ளது என்றால் இல்லை. எனக்கும், ராமசந்திரனுக்கும் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். ராமசந்திரனும் வழக்கு பிரதிவாதியும் நண்பர்கள்

என்றால் இல்லை. அத்தை மகன். அதனால் அவருக்கு எதிராக பொய்சாட்சி சொல்கிறீர்கள் என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
**Tittagudi.**